# இலால்குடி நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2021 – 2022

# இலால்குடி நகராட்சி
## 2021–2022 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

1) நகராட்சியின் பெயர் : இலால்குடி
2) நிலை : இரண்டாம் நிலை நகராட்சி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்:117 நாள்.07.12.2021–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது)
3) பரப்பு : 10.030 சதுர கி.மீ
4) மக்கள் தொகை : ஆண்கள் – 11755
பெண்கள் – 11985
கூடுதல் - 23740
(2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு)

எல்லை:-

இலால்குடி நகராட்சி வடக்கே இலால்குடி – அரியலூர் நெடுஞ்சாலையில் 1.300 கி.மீ என்ற இடத்திலிருந்தும், கிழக்கே இலால்குடி – அன்பில் சாலையில் 0.5 கி.மீ என்ற இடத்திலிருந்தும், தெற்கே இலால்குடி – கூகூர் சாலையில் 2.500 கி.மீ என்ற இடத்திலிருந்தும், மேற்கே இலால்குடி – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 1.00 கி.மீ இடத்திலிருந்தும் நகராட்சி எல்லை ஆரம்பமாகிறது. இலால்குடி நகராட்சி வார்டு எண்.17–ல் ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் என்ற சிவபெருமான் திருக்கோவில் பிரசித்து பெற்று விளங்குகிறது. மார்கழி மாதத்தில் ஆருத்ரா தரிசனமும், பங்குனி மாதத்தில் தேர் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

5. விரிவு படுத்தும் திட்டம்

நகரில் உள்ள சாலைகள் விரிவாக்கத்திட்டம் மற்றும் நகர் சுற்றுப்புறங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் நடப்பு ஆண்டில் நடவடிக்கையில் இருந்தது.

6. பணியாளர் அமைப்பு

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் 01.04.2021 முதல் 14.12.2022–ம் தேதி திருமதி.ப.நளாயினி செயல் அலுவலராகவும் திரு.வை. குமார் எம்.ஏ., 15.12.2021 –ம் தேதி முதல் 31.03.2022 வரை நகராட்சி ஆணையாளராகவும் பொறுப்பு வகித்துள்ளனர்.

அறிக்கை ஆண்டில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை திருமதி.அ.மோகனாம்பாள் தலைமை எழுத்தாராக பொறுப்பு வகித்துள்ளார்.

7. நகர் மன்றம்

அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

தற்போது அரசின் 31.12.2021–ம் தேதிய மாநில அரசு அரசிதழின்படி இலால்குடி இரண்டாம் நிலை நகராட்சிக்கு 24 வார்டுகள் நிர்ணயிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.16.12.2021–ன்படி இலால்குடி நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி வார்டு உள் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | ஆதிதிராவிடர் | ஆதிதிராவிடர் பெண்கள் | பொதுப்பிரிவு பெண்கள் | பொதுவானவர்கள் |
|---|---|---|---|---|
| 24 | 6. 22 | 5, 24 | 1, 4, 7, 11, 12, 13, 14, 15, 19, 20 | 2, 3, 8, 9, 10, 16, 17, 18, 21, 23 |

இலால்குடி நகராட்சியில் 22.02.2022–ம் தேதி நகர்மன்ற தேர்தல் நடத்தப்பட்டு கீழ்க்காணும் விபரப்படி நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

| வ.எண் | வார்டு எண் | பெயர் | வார்டு விபரம் |
|---|---|---|---|
| 1 | 21 | பி.துரைமாணிக்கம் | நகர்மன்ற தலைவர் |
| 2 | 5 | ஆர்.சுகுணா ராஜ்மோகன் | நகர்மன்ற துணைத் தலைவர் |
| 3 | 1 | த.ராதிகா | நகர்மன்ற உறுப்பினர் |
| 4 | 2 | அ.மணிமுருகன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 5 | 3 | க.சங்கர் | நகர்மன்ற உறுப்பினர் |
| 6 | 4 | ரா.விஜயலெட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | 6 | த.மருதமலையான் | நகர்மன்ற உறுப்பினர் |
| 8 | 7 | சா.சர்மிளா பானு | நகர்மன்ற உறுப்பினர் |
| 9 | 8 | அ.முகமது பெரோஸ் | நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | 9 | தா.ரா.ஆறுமுகம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | 10 | க.மாரிகண்ணன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | 11 | ரா.அமுதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | 12 | வே.சாரதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 14 | 13 | த.பிரியங்கா | நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | 14 | வீ.ராதிகா | நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | 15 | செ.லதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | 16 | அ.முஸ்தபா | நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | 17 | லா.த.செந்தில்மணி | நகர்மன்ற உறுப்பினர் |
| 19 | 18 | வைர காவியன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | 19 | பி. கௌதமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | 20 | கா.ராஜம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 22 | 22 | லி.மதியழகன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 23 | 23 | ம.செந்தில்நாதன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 24 | 24 | செ.அலமேலுமங்கை | நகர்மன்ற உறுப்பினர் |

மேற்படி நகர் மன்றம் 14.03.2022 முதல் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இலால்குடி நகராட்சி வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்களின் விபரம் (காலம் 14.03.2022 முதல் 31.03.2022 வரை)

| வ. எண். | வார்டு எண் | நகர் மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 3 | க. சங்கர் |
| 2 | 4 | ரா. விஜயலெட்சுமி |
| 3 | 10 | க. மாரிகண்ணன் |
| 4 | 17 | லா.த. செந்தில்மணி |

இலால்குடி நகராட்சி ஒப்பந்த குழு உறுப்பினர்களின் விபரம் (காலம் 14.03.2022 முதல் 31.03.2022 வரை)

| வ. எண். | வார்டு எண் | நகர் மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 7 | சா. சர்மிளா பானு |

இலால்குடி நகராட்சி நியமன குழு உறுப்பினர்களின் விபரம் (காலம் 14.03.2022 முதல் 31.03.2022 வரை)

| வ. எண். | வார்டு எண் | நகர் மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 23 | ம. செந்தில்நாதன் |

8. கூட்டங்கள்

தணிக்கையாண்டில் 15.12.2021 முதல் 13.03.2022 முடிய திரு.வை.குமார் அவர்கள் நகராட்சி ஆணையராகவும், தனி அலுவலராகவும் பணிபுரிந்து வந்துள்ளார்.

மாதந்தோறும் சாதாரணக்கூட்டம் மற்றும் அவசர நிமித்தம் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.

01.04.2021 முதல் 14.12.2021 முடிய பேரூராட்சிகளிலும், 15.12.2021 முதல் 31.12.2022 முடிய இரண்டாம்நிலை நகராட்சியிலும் கூட்டப்பட்ட கூட்டங்களின் விபரம்

| கூட்ட விபரம் | பேரூராட்சி | | நகராட்சி | |
|---|---|---|---|---|
| | கூட்டம் | பொருள்கள் | கூட்டம் | பொருள்கள் |
| ஒப்பந்தக்குழு கூட்டம் | – | – | – | – |
| சாதாரணக்கூட்டம் | 7 | 62 | 1 | 40 |
| அவசரக்கூட்டம் | 2 | 2 | 3 | 39 |
| சிறப்புக்கூட்டம் | – | – | – | – |
| நியமனக்குழு கூட்டம் | – | – | – | – |
| கூடுதல் | 9 | 64 | 4 | 79 |

9. அறிக்கையாண்டில் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் விபரம்:

| வ.எண் | திருவாளர்கள் | பணி விபரம் | முதல் | வரை |
|---|---|---|---|---|
| 1 | ப. நளாயினி | செயல் அலுவலர் | 01.04.2021 | 14.12.2022 |
| 2 | வை.குமார் | ஆணையர் | 15.12.2021 | 31.03.2022 |
| 3 | அ.மோகனாம்பாள் | தலைமை எழுத்தர் | 01.04.2021 | 31.03.2022 |
| 4 | மு. பால்ராஜ் | துப்புரவு ஆய்வாளர் | 01.04.2021 | 08.07.2021 |
| 4 | ந.கிருஷ்ணமூர்த்தி | துப்புரவு ஆய்வாளர் | 01.04.2021 | 31.03.2022 |
| 5 | பி.விஜய்கார்த்திக் | பொறியாளர் (பொ) | 21.12.2021 | 31.03.2022 |
| 6 | சித்ரா | பணிமேற்பார்வையாளர்(பொ) | 21.12.2021 | 31.03.2022 |
| 7 | கு.குமரேசன் | நகரமைப்பு ஆய்வர் (பொ) | 15.12.2021 | 31.03.2022 |

இலால்குடி நகராட்சியில் பணிபுரியும் இதர பணியாள்ாகளின் விபரம்

| வ.எண் | பணியின் விபரம் | அனுமதித்தது | பணிபுரிதல் | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 3 | 2 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 5 | 2 | 3 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – |
| 4 | மின் பணியாளர் | 1 | 1 | – |
| 5 | மின் பணி உதவியாளர் | 1 | 1 | – |
| 6 | ஓட்டுநர் | 1 | 1 | – |
| 7 | பம்பு மெக்கானிக் | 3 | 3 | – |
| 8 | பூங்கா காவலர் | 2 | 1 | 1 |
| 9 | பேருந்து நிலைய காவலர் | 1 | 1 | – |
| 10 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 3 | 3 | – |
| 11 | களப்பணி உதவியாளர் | 1 | 1 | – |
| 12 | தூய்மை பணியாளர்கள் | 37 | 32 | 5 |

தணிக்கை நடைபெறும் பொழுது 01.04.2021 முதல் 14.12.2021 முடிய திருமதி.ப.நளாயினி செயல் அலுவலராகவும், திரு.வை.குமார் 15.12.2021 முதல் 31.03.2022 வரை ஆணையாளராகவும் பொறுப்பு வகித்துள்ளார்கள்.

10) 2021– 2022 வழக்குகள் மற்றும் சட்ட செலவுகள்:

ஆண்டு இறுதியில் முடிவு பெறாத வழக்குகள் : 1

அறிக்கைஆண்டில் வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்ட தொகை : 5000

சென்ற ஆண்டு செலவிடப்பட்டதொகை : 70800

11) பொறியாளர் பிரிவு

இலால்குடி நகராட்சியில் 21.12.2021 முதல் 31.03.2022 முடிய துவாக்குடி நகராட்சி பொறியாளர் திரு.பி.விஜய்கார்த்தி மற்றும் திருமதி.சித்ரா பணி பொது மேற்பார்வையாளர் கூடுதல் பொறுப்பு வகித்துள்ளார்கள்.

12) போக்குவரத்துக்கள்: சாலைகள், பாலங்கள், கரிசல் கற்கட்டிடங்கள் சாலைகள்:

இந்நகராட்சி வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுவழிச்சாலைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) தேசிய நெடுஞ்சாலை – 2.500 கி .மீ
2) மாநில நெடுஞ்சாலை – 1.000 கி.மீ
3) மாவட்ட நெடுஞ்சாலை – 5.500 கி.மீ

தற்பொழுது அனைத்து தார்சாலைகளும் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

13 நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை விவரங்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | சிமெண்ட் சாலை | : | 10.48 கி.மீ |
| 2) | தார் சாலைகள் | : | 26.96கி.மீ |
| 3) | Paver Block சாலைகள் | : | 0.04 கி.மீ |
| 4) | மண் சாலை | : | 6.97 கி.மீ |
| 5) | Foot Path | : | 0.17 கி.மீ |
| | | | 44.62 கி.மீ |

14 குடிநீர் விநியோகம்

இலால்குடி நகராட்சியில் குடிநீர் விநியோகம் தொடர்பாக கீழ்க்காணும் விபரங்கள் வழங்கப்படுகிறது.

குடிநீர் மேல்நிலை தொட்டிகள்

| வ. எண். | குடிநீர் மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ள இடம் | கொள்ளளவு (லிட்டரில்) |
|---|---|---|
| 1 | கைலாஷ் நகர் | 4,00,000 |
| 2 | உமர் நகர் | 30,000 |
| 3 | சந்தைப்பேட்டை | 30,000 |
| 4 | பேருந்து நிலையம் | 10,000 |
| 5 | சாமி செட்டியார் பூங்கா | 10,00,000 |
| 6 | ஸ்லாட்டர் ஹவுஸ் | 30,000 |
| 7 | ஏல். அபிஷேகபுரம் | 30,000 |
| | கூடுதல் | 15,30,000 |

| | | |
|---|---|---|
| 1 | பம்பின் மெயின் நீளம் | 70 கி.மீ |
| 2 | குடிநீர் விநியோகம் குழாய்கள் நீளம் | 1245 கி.மீ |
| 3 | பொது குழாய்கள் எண்ணம் | 317 |
| 4 | குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணம் | வீட்டு உபயோகம் – 311<br>வணிகம் – 9<br>கூடுதல் – 320 |
| 5 | குடிநீர் விநியோக லாரி | ஏதும் பராமரிக்கப்படவில்லை |
| 6 | இந்தியா மார்க் (IV) | 174 எண்ணம் |
| 7 | மினி பவர் பம்ப் | 20 எண்ணம் |
| 8 | குடிநீர் இணைப்பு கட்டணம் | வீட்டு உபயோகம் மாதம் ஒன்றிற்கு – ரூ. 75/–<br>வணிகம் பயன்பாட்டிற்கு மாதம் ஒன்றிற்கு – ரூ. 150/– |
| 9 | குடிநீர் இணைப்பு முன் வைப்பு தொகை | வீட்டு இணைப்பு ரூ. 6000/–<br>வணிக இணைப்பு ரூ. 8000/– |
| 10 | தற்போதைய நபர் ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு குடிநீர் விநியோகம் | 80 LPCD |
| 11 | நகரின் குடிநீர் தேவை | 2.11 MLD |
| 12 | நகரின் குடிநீர் தற்போது விநியோகம் | 2.11 MLD |

15 துவக்கப்பள்ளிகளின் விபரம்

1.ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,சிறுதையூர்
2. ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,ஓமக்குளம்
3. ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பரமசிவபுரம்
4. ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வசந்த நகர்
5. ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,மும்முடிசோழமங்கலம்
6. ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,நன்னிமங்கலம்
7. ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி, எல்.அபிஷேகபுரம்
8. நடராஜ விலாஸ் மான்ய துவக்கப்பள்ளி, சீனிவாசபுரம்

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள் தற்போது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ளது. மேற்படி பள்ளிகளை நகராட்சியின் பராமரிப்பிற்கு கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

16) தனியார் பள்ளிகள் பொது நூலகங்கள்

பொது நூலகங்கள் அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஆனால் மாவட்ட கிளை நூலகம் ஒன்று இந்நகரில் செயல்பட்டு வந்தது.

17) சந்தைக்கு மற்றும் விழாக்களுக்கு தண்ணீர் வசதி

அறிக்கை ஆண்டில் உள்ளுர் முக்கியத்துவம் பெற்ற திருவிழாக்களும் வாரச்சந்தையும் வழக்கம் போல் நடைபெற்றது. தேவையான சுகாதாரப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இந்நகராட்சி பகுதிக்கு சொந்த குடிநீர் திட்டம் செயல்பாட்டில் 6 குடிநீர் விநியோகத்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் ஒருநாளைக்கு சுமார் 22.10 லட்சம் லிட்டர் கொடுக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொதுக்குழாய்கள் | -- | 131 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | -- | 325 |

18) சாக்கடை

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை திறந்தவெளி கால்வாய் 28.626 கி.மீ. பராமரிக்கப்பட்டு வருகிறது.

19) இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் பராமரிப்பு செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு, சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி எல்லையின் அருகில் கொள்ளிடம் ஆறு செல்கிறது.

20) தெருவிளக்கு வசதி:

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்ட விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | LED | | – | 130 |
| 2. | சோடியம் – வேப்பர் விளக்கு | 250 W | – | 11 |
| 3. | குழல் விளக்கு | | – | 1532 |
| 4. | CFL விளக்கு | | -- | 230 |
| 5. | உயர்மின் கோபுர விளக்கு | 250 W | – | 8 |
| 6. | சோலார் விளக்கு | | – | 98 |
| | மொத்தம் | | – | 2009 |

21) பொது நலம் மருத்துவ உதவி

இந்நகராட்சி எல்லைக்குள் அரசு மருத்துவமனை ஒன்றும், 4 தனியார் மருத்துவ மனைகளும் உள்ளன.

22) அரசு மருத்துவமனை

இந்நகராட்சி பகுதியில் அரசு மருத்துவ மனை இயங்கி வருகிறது. ஒரு சுகாதார ஆய்வாளர் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்து வருகின்றார். அறிக்கை ஆண்டில் சுகாதாரத்தைப்பற்றிய பிரசுரங்கள் சுகாதார சிப்பந்திகளைக்கொண்டு விளம்பரம் செய்யப்பட்டு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. 24 வார்டுகளில் அவ்வப்போது திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

23) பொது சுகாதாரம்:

இந்நகராட்சியில் நகர் நல அலுவலர், சுகாதார அலுவலர் பதவி இல்லை அறிக்கை ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சுகாதார ஆய்வர் ஒரு பணியிடங்களில் ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். அனுமதிக்கப்பட்ட நிரந்தர தூய்மை பணியாளர்கள் 37 நபர்களில் 32 நபர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 54 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்தலைப்பின் சம்பளம் மற்றும் இதரவகையினர் நடப்பு ஆண்டில் ரூ.184.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 2021–2022–ல் ரூ.184.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட இந்நகராட்சியில் நான்கு பரப்புரையாளர்கள் (Animator) மூலம் பொதுமக்களுக்கு மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம்பிரித்து வழங்குவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

24) பிறப்பு பதிவுகள், மற்றும் மகப்பேறு உதவி

அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் பணியை சுகாதார ஆய்வாளர் பதவிக்குரிய முழு அதிகாரம் பெற்ற ஒரு சுகாதார ஆய்வர் பார்த்து வருகிறார். பிறப்புகள் பதிவு செய்வதில் அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 186 ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் பிள்ளைப்பேறு பார்க்கப்படவில்லை.

நகராட்சியால் அறிக்கையாண்டில் குழந்தைகள் காப்பகம் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

25) இறப்பு பதிவுகள் மற்றும் தொற்று நோய்கள்:

1) அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் – 209
2) காலரா, அம்மைபோன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன. – இல்லை

26) அறிக்கை ஆண்டில் இறப்பு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | காலரா | -- | இல்லை |
| 2) | அம்மை | -- | இல்லை |
| 3) | பிளேக் | -- | இல்லை |
| 4) | மலேரியா | -- | இல்லை |
| 5) | சீதபேதி | -- | இல்லை |
| 6) | காய்ச்சல் | -- | இல்லை |
| 7) | பிறமூச்சுவை நோய்கள் | -- | இல்லை |
| 8) | பிறகாரணங்களால் | -- | 209 |
| 9) | வெறிநாய் கடியினால் இறப்பு | -- | இல்லை |

இந்நகராட்சியில் கொசுத்தடுப்பு ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார இயக்குநர், முதுநிலை பூச்சியியல் வல்லுநர் அறிவுரைகளின்படி, Egg, larva, Pupaadult, Stage க்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான் அபேட் பயால் லார்வி புழு என்ற மருந்து மூலம் கொசு உற்பத்தி ஒழிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தண்ணீர் தேங்கி உள்ள இடங்களில் மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் 10 டெங்கு பணியாளர்கள் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது மற்றும் பைரித்திரம் கொண்டு கொசு மருந்து புகை இயந்திரம் மூலம் புகைபரவச்செய்து கொசுக்களை அழிக்கப்பட்டும் வருகிறது. கொசு ஒழிப்பு பணிக்கு வாகனத்தில் பொருத்தப்பட்ட கைத்தெளிப்பான் மூலம் பெரிய புகைமருந்து இயந்திரம் சிறிய புகை மருந்து இயந்திரங்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் 1 எண்ணிக்கை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் நலம் பெற்றுள்ளார்.

27) கொக்கிப்புழு தொற்று:

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சிப்பகுதியில் இல்லை.

28) நோய்தடுப்புத்திட்டம்:

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள குழந்தைகளுக்கு தற்காலிக வேக்சினேட்டர் மூலமாக சொட்டுமருந்து ஒவ்வொரு புதன் கிழமையும், வழஙகப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பள்ளிக்கான வளர்இளம் பெண்களுக்கு விட்டமன் மருந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் துணை இயக்குநர், பொது சுகாதாரம், அறந்தாங்கி அவர்களின் உத்திரவின்படி, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

29) குடும்ப நலத்திட்டம்:

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை.

30) பொதுசுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு:

அறிக்கை ஆண்டில் 1 பொதுக்கழிவறைகளும், 23 சமுதாய கழிவறைகளும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை, மாலை இருமுறை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி லாரிகள் மூலமாகவும் பூவாளூர் ரோட்டில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது.

நகரில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் முழுவதும் காலை ஒரு முறை சுத்தம் செய்யப்படுகிறது. மேற்படி பணிகளை மூன்று மேற்பார்வையாளர் மூலம் மேற்பார்வையில் செய்யப்படுகிறது. நகரின் சேகரிக்கப்படும் குப்பைகளை TATA ACE(LCV) , ஒன்று மினி லாரி ஒன்று (Ashok Laylond) , Eicher ஒன்று மற்றும் 1 BOV 36 தள்ளு வண்டிகள் மூலம் தினந்தோறும் அப்புறப்படுத்தப்படுகிறது.

31) துப்புரவு பணி:

நகராட்சியில் 6810 மொத்த குடியிருப்புகள் உள்ளது. 1355 வணிக நிறுவனங்கள் உள்ளது. துப்புரவுப்பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

நகராட்சியில் மலேரியா நோய் ஒழிப்புத்திட்டம் கூடுதல் பணியாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 3 துப்புரவு பணியாளர்கள் மருந்து தெளிக்கும் பணியாகளை மேற்கொண்டு வருகின்றார். நகராட்சி பகுதி ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை கொசு லார்வா ஒழிப்பு தெளிக்கப்படுகிறது. பணியை சுகாதார ஆய்வாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

32) கலவை உரம்

இந்நகராட்சி பூவாளூர் சாலையில் சர்வே எண்.132/5/6–ல் சுமார் 0.90 சென்ட் நிலப்பரப்பில் குப்பை சேகரிக்கும் இடம் அமைந்துள்ளது. கடந்த 2000–ம் வருடம் முதல் கலவை உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

33) உணவு கலப்பட தடைச்சட்டம்:

உணவு பாதுகாப்பு சட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

34) வாடகைக்கு ஓடும் கார்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

35) சந்தைகள், பேருந்து நிலையம் ஆடுவதை நிலையம், மீன் அகாடி நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

அறிக்கையாண்டிலும், அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு.

| ஆண்டு | சந்தை | கட்டண கழிப்பறை | ஆடுவதை சாலை |
|---|---|---|---|
| 2018–2019 | 2.78 லட்சம் | 3.65லட்சம் | 1.75 லட்சம் |
| 2019–2020 | 2.88 லட்சம் | 3.81 லட்சம் | 1.84லட்சம் |
| 2020–2021 | 2.50 லட்சம் | 3.18 லட்சம் | 1.53 லட்சம் |
| கூடுதல் | 8.16 லட்சம் | 10.64 லட்சம் | 5.12 லட்சம் |

36) சந்தைகள்:

இந்நகராட்சியில் தினசரி காய்கனி சந்தை மற்றும் வாரச்சந்தை பராமரிக்கப்பட்டு வருகிறது. வாரச்சந்தையில் 6 கடை கட்டப்பட்டுள்ளன. நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அனைத்தும் பொது ஏலம் மூலம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் மூலம் அறிக்கையாண்டில் ரூ.42.47 லட்சம் வருமானம் வரப்பெற்றது.

37) பேருந்து நிலையம்

இந்நகராட்சியில் பேரூராட்சியாக இருந்தபொழுது 1965–ம் ஆண்டில் பேருந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரப்பெற்றது. நகராட்சி பேருந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு சராசரியாக 120 பேருந்துகள் வந்து செல்கின்றன. அறிக்கையாண்டில் பேருந்து நிலைய வசூலை நகராட்சியின் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பேருந்து நிலையம் ‘சி’ கிரேடு நிலையில் பராமரிக்கப்படுகிறது.

38) மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் :

இந்நகராட்சியில் இரு சக்கர வாகனம் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

39) வாடகை உந்து நிலையம்.

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

40) சாலையோர மரங்கள்

சாலை ஓர மரங்கள், இந்நகராட்சியில் பராமரிக்கப்படுகின்றது.

41) நகரமைப்பு பிரிவு

அறிக்கை ஆண்டில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் திரு.குமரேசன், மணப்பாறை நகராட்சி 15.12.2021 முதல் 31.03.2022 முடிய உரிய பொறுப்பு வகித்து வருகின்றார்.

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் சங்கிலியாளர் பணி நியமனம் செய்யப்படவில்லை இந்நகராட்சி எல்லையில் உள்ள தெருப்பகுதிகள் மட்டும் 1988ம் ஆண்டில் அளந்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலால்குடி நகராட்சிப் பகுதிக்கு ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் வசதி கிடைக்கப்பெற்றுள்ளதால் வளர்ச்சிகள் பல்வேறு வகைகளில் ஏற்பட்டுள்ளது. தற்போது, ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் திட்ட உத்தேசங்களுக்கு ஏற்றதாக இல்லாமல் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் மேற்படி உத்தேசங்களை தயாரிக்கவும் அமுல் படுத்தவும் போதிய அலுவலர்களும் பணியாளர்களுக்கும் மாதம் மாதம் ஊதியம் வழஙக நிதிநிலையும் இல்லை. நில அளவை பதிவேடுகள் இல்லாமையால் நகரளவை சங்கிலியாளரும் நியமிக்கப்படவில்லை. மேலும், பொருளாதார நிதிக்குறைவின் காரணமாக பொதுநிதியிலிருந்து ஒரு விழுக்காடு தொகையை உள்ளூர் திட்டக்குழுமம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

42. சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை விவரம்

| விபரம் | நிலுவை ரூ.லட்சம் | நடப்பு ரூ.லட்சம் | மொத்தம் ரூ.லட்சம் |
|---|---|---|---|
| கேட்பு | 18.22 | 63.73 | 81.95 |
| வசூல் | 2.44 | 62.70 | 65.14 |
| நிலுவை | 15.78 | 01.40 | 16.82 |

அறிக்கை ஆண்டில் 01.10.1998 முதல் சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டது

43. பொது வருவாய்

சொத்துவரி 81 (1)ன் படி சொத்துவரியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை சேர்ந்துள்ளன.

வருட வாடகை மதிப்பில் அரைவருட விதிகம்

1) பொதுக்காரியங்களுக்கு 3.00%

2) கக்கூஸ் வரி 1.5%

3) தண்ணீர் சாக்கடை வரி 1.5%

4) விளக்குவரி 2.5%

5) வடிகால் 1.5%

6) கல்வி வரி 0.00%

--------

மொத்தம் 10.00%

------------

44. காலி நில வரி

இந்நகராட்சியில் அராணை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை நாள்.20.08.2009–ன்படியும், இந்நகர் மன்ற தீர்மானம் எண்.296 நாள்.15.03.2010–ன்படியும் 01.10.2018 முதல் கீழ்க்காணும் விபரப்படி காலிமனை வசூலிக்கப்பட்டு வருகிறது.

| மண்டலங்கள் | தற்போதைய மண்டல மதிப்பு |
|---|---|
| A | 0.30 |
| B | 0.20 |
| C | 0.15 |

45. 01.10.2018 (இரண்டாம் அரையாண்டு) முதல் தொழில்வரி உயர்வு செய்யப்படுவது குறித்த அறிவிக்கை

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (திருத்தப்படி 59/1998) பிரிவு 124-D, உட்பிரிவு (13) இல் வழுங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும் , தமிழ்நாடு தொழில்வரி சட்டம் 1999 விதி 16(1)ன்படியும், கீழ்க்கண்ட விபரப்படி தொழில் வரி நிர்ணயம் செய்து இறுதியாக ஊர்ஜிதமாக நிர்ணயித்து இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2014 முதல் திருத்தம் செய்யப்பட்ட அரையாண்டு தொழில்வரி (ரூ) | 01.10.2018 முதல் 25% உயர்த்தி திருத்தியமைக்கப்பட்டு வசூலிக்கப்படும் தொழில்வரி (முழுமைக்காக அருகில் உள்ள 5 ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | ரூ.21,000/- வரை பெறுவோர் | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21,000/- முதல் ரூ.30,000/- வரை | 130/- | 155/- |
| 3 | ரூ.30,001/- முதல் ரூ.45,000/- வரை | 320/- | 400/– |
| 4 | ரூ.45,001/- முதல் ரூ.60,000/- வரை | 630/- | 790/– |
| 5 | ரூ.60,001/- முதல் ரூ.75,000/- வரை | 950/- | 1190/– |
| 6 | ரூ.75,001/- முதல் அதற்கு மேல் | 1250/- | 1250/– |

46. தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை விவரம்

(ரூபாய் லட்சத்தில் )

| விபரம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்புத்தொகை | 0.45 | 19.52 | 19.97 |
| மொத்த வசூல் | 0 | 19.52 | 19.52 |
| நிலுவை | 0.45 | 0 | 0.45 |

47) பொருளாதார நிலை ரொக்கமாக முதலிடு வழியாக (ரூபாய் இலட்சத்தில் )

ஆண்டின் வருமானம் ( மான்யம் மற்றும் முதலீடு நிதி) – ரூ. 701.31 இலட்சம்
ஆண்டின் செலவு – ரூ. 734.64 இலட்சம்

48) கணினி

இலால்குடி நகராட்சியில் முக்கியமான கணக்கு வழக்குகள் சம்மந்தமான அறிக்கைகளை கணினி பொறி மூலம் செயல்படுத்திட உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) பணியிடம் இல்லாத சூழ்நிலையில் துறையூர் நகராட்சி உதவி திட்ட அமைப்பாளர் கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார்.

49) இணையதளம் – இ– மெயில்

இலால்குடி நகராட்சியில் தனியாக ஒரு இணையதள வசதியும் செய்யப்பட்டுள்ளது. https://www.tnurbantree.tn.gov.in /Lalgudi

இ– மெயில் – முகவரி: commr.lalgudi@tn.gov.in
தொலைபேசி எண்.9150375504

50) கடன் தொகை செலுத்தியது

31.3.2022 ல் கடன் நிலுவை ஏதும் இல்லை

51) தணிக்கை:

அறிக்கை ஆண்டில் தொடக்கத்தில் இருந்து

தணிக்கைத்தடைகள் –– 109

அறிக்கையாண்டில் வரப்பெற்றது ––

மொத்தம் –– 109

அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றவை –– 50

அறிக்கையாண்டில் இறுதி நிலுவை –– 59

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இந்நகராட்சியில் நன்முறையில் செயல்பட்டு வருவதோடு பொதுமக்கள் அதனால் அனைத்து பயன்களும் அடைந்து வருகின்றனர்.

52) பொதுவான திட்டம்

இலால்குடி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக 15.12.2021–ம் தேதி முதல் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே இலால்குடி நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி திட்டப்பணிகள் அரசிடம் நிதி உதவி பெற்று நிறைவேற்றப்பட உள்ளது.

1. புதிய பேருந்து நிலையம் அமைத்தல்
2. புதிய நகராட்சி அலுவலகம் கட்டுதல்
3. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் "Bio Mining" திட்டம் செயல்படுத்துதல்
4. மண் சாலைகளை தார் சாலையாக மாற்றம் செய்து மழைநீர்வடிகால் கட்டுதல்
5. நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் அபிவிருத்தி பணிகள் செய்தல்
6. நகராட்சிக்கு சொந்தமான குளங்களை மேம்பாடு செய்தல்
7. நகராட்சிக்கு சொந்தமான சுடுகாட்டில் Gasifier Cematorium திட்டம் செயல்படுத்துதல்

## முடிவுரை

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி பொது சுகாதார வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வில்லாமல் வழஙகி நகராட்சி நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் அனுப்பப்படும் கருத்துரைகளை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதுபோல் இந்நகராட்சியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த அனைத்து உள்/வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கிறேன்.

ஆணையாளர்
இலால்குடி நகராட்சி

18.10.2022

18.10.22